ISSN - 2448 - 9883

# PROCEEDINGS

## International Conference on Contemporary Management (ICCM) - 2015

"Driving Productivity through Knowledge & Innovation"

Volume - II

Faculty of Management Studies & Commerce
University of Jaffna, Sri Lanka
11th & 12th, June 2015

ICCM-2015

# PROCEEDINGS

## 2nd International Conference on Contemporary Management

"Driving Productivity through Knowledge & Innovation"

Faculty of Management Studies and Commerce
University of Jaffna, Sri Lanka

11th & 12th , June, 2015

## 2nd International Conference on Contemporary Management (ICCM)-2015

©Copy Right 2015 Faculty of Management Studies and Commerce, University of Jaffna, Sri Lanka

Published by: Faculty of Management Studies and Commerce, University of Jaffna, Sri Lanka

URL : www.jfn.ac.lk/iccm

e-mail: : iccmuoj@gmail.com

T.P : 0094(0)212223610

Printers : Guru Printers Thirunelvely, Jaffna.

**ISSN:** : ISSN 2448-9883

**Disclaimer:**

Responsibilities for content of the full papers included in the publication remain with respective authors.

Proceeding of International Conference on Contemporary Management - 2015 (ICCM-2015), pp 166-174

# யாழ்ப்பாண மாவட்ட இந்து மயானங்கள் எதிர்நோக்கும் சமகாலப் பிரச்சினைகளும், அவற்றுக்கான தீர்வுகளும்.

சி.சுகந்தினி


## ஆய்வுச்சுருக்கம்

தொன்மையும், சிறப்பும்மிக்க சனாதனதர்மம் எனப்படும் இந்துசமயம் யாழ்ப்பாணப்பிரதேசத்தில் 86% க்கு மேற்பட்டவர்களால் பின்பற்றப்படும் சிறப்பிற்குரியது. எல்லாப்பிறப்பினுள்ளும் மானிடப்பிறப்பு ஒன்றே மாண்புமிக்கது. வையத்துள் வாழ்வாங்கு வாழும் முறைப்படி வாழ்ந்த மனித உயிருக்கு மிகவும் கௌரவமான இறுதிமரியாதை வழங்கவேண்டும். உயிர்பிரிந்த உடலானது புனிதத்தன்மைபெறுவதினால் அதன் புனிதத்தை மேலும் மேலும் பாதுகாத்துக்கொள்ளவேண்டியது அவசியமாகின்றது. உயிர் பிரிந்த பின்னர் இயல்பாகவும், செம்மையாகவும், கௌரவமாகவும் செய்து முடிப்பதற்கான சில சமயநம்பிக்கை சார்பான நிகழ்வுகளை நிறைவேற்றுகின்ற இடமாக மயானங்கள் விளங்குகின்றன. யாழ்ப்பானப்பிரதேசத்தில் இந்து மக்கள் தமது இறுதிக்கிரியைகளை மேற்கொள்ள சுமார் 244 இந்துமயானங்கள் காணப்படுகின்றன. இவ் இந்துமயானங்கள் சமகாலத்தில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றன. மாறிவரும் உலகில் சமய, சமூக விழுமியங்கள் பல இன்று கேள்விக்குரியதாக விளங்குகின்றன. இத்தகைய சூழ்நிலையில் இந்து மயானங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் இனம்காணப்படுவதுடன் இந்து மயானங்கள் செயல்திறன் கொண்ட சமூக மையமாக மாற்றியமைப்பதற்கும் சில தீர்வுகளும் முன்வைக்கப்படுகின்றன.


**திறவுச்சொற்கள்:** இந்துசமயம், இந்து மயானங்கள், மரணம்.

### ஆய்வின் அறிமுகம்:-

உலகிலுள்ள பிரதான சமயங்களுள் தொன்மையும். சிறப்புமிக்க சனாதனதர்மம் எனப்படும் இந்துசமயம் யாழ்ப்பாணப்பிரதேசத்தில் 86% க்கு மேற்பட்டவர்களால் பின்பற்றப்படும் சிறப்பிற்குரியது.[1] மனித உயிர் உன்னதமானது மட்டுமன்றி கௌரவமானதும் ஆகும். அதேநேரம் மரணம் மனித வாழ்வில் "நம்பமுடியாத", "புதிரான" விடயமாகவும் இருப்பதோடு, வாழ்வின் யதார்த்தமாகவும், தவிர்க்க முடியாத ஒன்றாகவும் அமைந்துள்ளது. மயானம் என்பது "பிதிர்க்கானம்" என மதுரைத் தமிழ் பேரகராதி கூறுகின்றது.[2] எமது உடலிலிருந்து உயிர் பிரிந்து சென்ற பின்னர் அந்த உடலை தகனம் செய்வதற்காக இயல்பாகவும், செம்மையாகவும், கௌரவமாகவும் சமய நம்பிக்கை சார்பான நிகழ்வுகளை நிறைவேற்றுகின்ற இடமாகவும் இந்து மயானங்கள் விளங்குகின்றன.

ஒர் உடலுக்குள் இருந்த ஆன்மா அவ்வுடலைவிட்டு நீங்கியவுடன் அவ்வான்மா நற்கதியை அடையவேண்டும் என்பதற்க்காக அவ்வான்மா இருந்த உடலையும், அவ்வான்மாவையும் குறித்துச் செய்யும் வழிபாடு பிதிர் வழிபாடு எனப்படும். இறைவன் குறித்த வழிபாடு நம்பிக்கையின் அடிப்படையில் நடைபெறுவது போன்று, ஆன்மா பற்றிய வழிபாடும் நம்பிக்கையின் அடிப்படையில் நடைபெறுகின்றது.

இந்து மயானங்கள் ஆலயங்களைப் போன்று மிகவும் புனித தன்மைகொண்ட ஒன்றாகும். ஆலயங்களின் திருவிழாவின் போது ஊர்மக்கள் எல்லோரும் ஒன்று கூடி வழிபடுவது போன்றே, மயானங்களிலும் மரணித்தவரின் இறுதி ஊர்வலத்தில் ஊர்மக்கள் ஒன்றுகூடி இறந்த உடலுக்கு வணக்கம் செலுத்தும் தன்மையைக் காணமுடியும். அதாவது ஆலயங்களில் நடைபெறும் யாகங்களை போன்றே இந்து மயானங்களிலும் இறந்தவரின் நெஞ்சினிலே அக்கினியை இட்டு 'அக்கினியில் பூரண ஆகுதியாக இவ்வுடம்பை வழங்குகின்றேன்' என்று தீ மூட்டுபவர் கூறி தீயீடுவார்.

சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம் கிழக்குப் பல்கலைக்கழகம். vanathypahi@gmail.com

பிதிர்கடன் இந்துசமய மரபில் முக்கியம் பெறுகின்றது. இறந்தவர்களுக்கென நிகழும் இக்கிரியைகள் அவரவர் ஆத்மாவை புனிதப்படுத்திச் சாந்தியடையவும், திருப்தி கொள்ளவும் துணைபுரிகின்றது. இவ்வகையில் செய்யப்படும் கிரியைகள் பிதிரர் சாபத்தை நீக்கி நல்வாழ்வு பெற வழிவகுக்கும் என்ற நம்பிக்கையும் காணப்படுகின்றது.

கம்பராமாயணத்தில் இராமன் தசரதனுக்கும், விபீஷணன் இராவணனுக்கும் ஆற்றிய அபரக்கிரியைகளை உற்று நோக்குவதன் ஊடாக அபரக்கிரியை தொடர்பான விடயங்களையும், அவை ஆற்றவேண்டிய இடங்களையும் அறிந்து கொள்ளமுடிகின்றது. சிறப்பாக, சிவபூமியாகிய இலங்கையில் சிறந்த சிவ பக்தனாகிய இராவணன் தனது தாயாரின் இறுதி நிகழ்வை முறையாகவும், சிறப்பாகவும் செய்யும் பொருட்டு திருகோணமலையில் கன்னியா வெந்நீருற்றை வெட்டியதாக கூறும் ஐதிகம் வாயிலாக மேலும் தெளிவாக்க முடிகின்றது. பல்லவர் காலத்தில் இறந்த பூம்பாவையின் எலும்பு, குடத்தில் இட்டு பாதுகாக்கப்பட்டு வந்தது என்பதனையும், இறந்தவர்களை தகனம் செய்த சாம்பலை பூசிய சிவன் என பாடிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரின் தேவாரப் பாடல் மூலம் அக்கால அபரக்கிரியைகள் நடைபெற்ற இடங்களையும். சூழலையும் அறியமுடிகின்றது.[3]

தற்காலத்தில் இந்து மயானங்களின் வளர்ச்சி நிலையில் பல்வேறு பிரச்சினைகள் புதிய வடிவில் எழுந்துள்ளன. இதனை எதிர்கொள்ள முடியாத ஒரு தளர்வு நிலை காணப்படுகின்றது. குறிப்பாக, கடந்த மூன்று தசாப்தகாலமாக யாழ்ப்பாணத்து இந்து மாயனங்கள் பல வழிகளிலும் பாதிப்படைந்து வந்துள்ளன. இக்காலத்தில் நிலவிய யுத்தம், அகதி வாழ்க்கை, பட்டினிச்சுமை, அதிர்ச்சி, சோகம், பயம், எதிர்காலம் பற்றிய நம்பிக்கையீனம், ஆகியவற்றால் நலிவடைந்துள்ள இந்துக்களது வாழ்வியல் அவலங்கள், அதன் விளைவாக இந்துக்களது சிந்தனைத் தெளிவின்மை போன்ற காரணங்களினால் சமூகப் பெறுமானங்கள், விழுமியங்கள் வலுவிழக்கப்படவும், மீறப்படவும் தூண்டுதல் அளித்தன. இவ்வாறான நலிந்த சமூக, பண்பாட்டு சூழ்நிலையில்தான் இந்து மயானங்கள் பெரும் பிரச்சினைகளை உள்வாங்க நேரிட்டது.

**ஆய்வின் நோக்கம்.**

மனிதப்பிறவியில் என்றோ ஒருநாள் நிச்சயிக்கப்பட்ட ஒரு நிகழ்வாக மரணம் காணப்படுகின்றது. மனித வாழ்க்கையில் நிச்சயமாக நடக்ககூடிய ஒரேயொரு நிகழ்வு இவ்மரணம்தான். மரணம் என்பது எமது வாழ்க்கையில் மாற்றப்பட முடியாததும், தவிர்க்கப்படமுடியாததுமாகும். இவ்வாறாக ஒவ்வொரு மனிதனும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் மரண நிகழ்வை மேற்கொள்வதற்குரிய மயானங்கள் ஒரு ஆலயத்திற்கு சமமாக அமைதல் சிறந்தது. இவ்வாறான மயானங்கள் பற்றிய ஓர் விரிவான விளக்கத்தை கொடுப்பதுடன், இம்மயானங்களின் இன்றைய நிலையையும் எடுத்துச் சொல்லுவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

இலங்கையில் கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக அதிகளவு வளங்கள் பயன்படுத்தப்படாது உள்ளன. இவ்வளங்களை திட்டமிட்டு சரியாகவும் முழுமையாகவும் பயன்படுத்துவது அவசியமாகும். இந்த வகையிலே ஆகமங்கள் கூறுகின்ற ஸ்தான நிர்ணயத்தின் படி இந்து மயானங்களை முழுமையாகவும், சிறப்பாகவும் பாவனைக்கு உட்படுத்துவதே இவ்வாய்வின் நோக்கம் ஆகும்.

இந்துமயானங்கள் எதிர்நோக்கும் சமகாலப் பிரச்சினைகளை இன்றைய சூழ்நிலையில் வெளிக்கொணர்வதும், இப்பிரச்சினைகளுக்கான காரணங்களை தெளிவாக இனம்கண்டு, யாழ்ப்பாணத்து இந்து மயானங்களின் வளமான மேம்பாட்டுக்கான முன்மொழிவுகளை எடுத் துரைப்பதும் இவ்வாய்வின் நோக்கங்களாக அமைகின்றன.

**ஆய்வு வரையறை.**

இவ்வாய்வானது யாழ்ப்பாண மாவட்டத்தை மட்டும் ஆய்வு எல்லையாகக்கொண்டு ஆய்வு செய்யப்படுகின்றது. யாழ்ப்பாண மாவட்டம் 1025 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு கொண்ட பிரதேசமாகும். மேலும், 86% மான இந்து சமய மக்கள் வாழும் பிரதேசத்தில் தமது இறுதி கிரியைகளை மேற்கொள்ள சுமார் 244 இந்து மயானங்கள் காணப்படுகின்றன.

யாழப்பாண குடாநாட்டில் 2013ம் ஆண்டின் மாவட்ட செயலக கணிப்பீட்டின் பிரகாரம் 288,749 குடும்பங்களைக் கொண்ட மொத்த சனத்தொகையாக 659,619 பேர் வசித்துவருகின்றனர். மேலும் இப்பிரதேசத்தில் வாழுகின்ற மொத்த

சனத்தொகையில் 288,663 குடும்பங்களைக் கொண்ட 650,339 பேர் தமிழர்கள் ஆவார்கள். அதாவது மொத்த சனத்தொகையில் 99.7% மானவர்கள் தமிழர்கள் ஆவார்கள். மேலும் பெரும்பான்மை தமிழர் வாழும் யாழ்ப்பாணப்பிரதேசத்தில் 264,689 குடும்பங்களைக் கொண்ட 563,308 பேர் இந்து மதத்தை சார்ந்தவர்களாக உள்ளனர் அதாவது மொத்த குடாநாட்டு சனத்தொகையில் 86 % மானவர்கள் இந்து மதத்தவர்கள் ஆவார்கள்.[4]

ஆய்வுப்பிரதேசத்தில் பாதுகாப்பு படைகளினால் "பாதுகாப்பு வலயமாக" பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களில் உள்ள இந்து மயானங்கள் செயற்படாத காரணத்தினால் இவ்வாய்வில் அவை தவிர்க்கப்பட்டுள்ளன.

**ஆய்வு முறையியல்.**

இவ்வாய்வானது விபரணமுறை, பகுப்பாய்வு முறை ஆகிய ஆய்வுமுறைகளில் மேற்கொள்ளப் படுகின்றது. மேலும், இவ்வாய்வுக்கான விடயங்கள் களஆய்வு மூலம் வெளிக் கொணரப்படும். யாழ்ப்பாண மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் உள்ள இந்துமயானங்களின் விபரங்கள் வினாக்கொத்து முறை மூலம் பெறப்படுகின்றது.

ஆய்வின் மூலங்கள்

1987ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட பிரதேச சபை, நகரசபை மற்றும் மாநகரசபை கட்டளைச் சட்டங்களின்படி "இடுகாடு, சுடுகாடு" என்பன உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் பரிந்துரைக்கப் பட்டுள்ளன. இதன் பிரகாரம், இந்துமயானங்கள் தொடர்பான உள்ளூராட்சி மன்றங்களின் வெளி யீடுகள். சனசமூக நிலையங்களின் வெளியீடுகள், சமகாலத்தில் வெளிவந்த சஞ்சிகைகள், பத்திரிகைக்குறிப்புக்கள், மாவட்ட, பிரதேச செயலகங்களின் புள்ளிவிபர அறிக்கைகள், மற்றும் அதனுடன் தொடர்பான நூல்கள், இணையத் தளங்கள் என்பவற்றை அடிப்படையாகக்கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

இந்து மயானங்கள் எதிர்நோக்கும் சமகாலப்பிரச்சினைகள். யாழ்ப்பாண மாவட்டம் 1025 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு கொண்ட பிரதேசமாகும். மேலும், 86% மான இந்து சமய மக்கள் வாழும் பிரதேசத்தில் தமது இறுதி கிரியைகளை மேற்கொள்ள 244 இந்து மயானங்கள் காணப்படுகின்றன. இந்து மயானங்கள் பல்வேறு சவால்களுக்கும் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்து செயல்பட்டு வருகின்றன.

யாழ் மாவட்டத்திலே காணப்படுகின்ற இந்து மயானங்களிடையே வேறுபட்ட முகாமை செயற்பாடுகள் காணப்படுகின்றன. இந்து மயானங்கள் யாவும் உள்ளூராட்சி மன்றங்களினாலேயே மேற்பார்வை செய்து, முகாமை செய்யப்படுகின்றன. ஆனாலும் உள்ளூராட்சி மன்றங்கள் தமது செயற்பாட்டை பரவலாக்கும் நோக்கில் அபிவிருத்தி சபைகளை உருவாக்கி அவற்றின் ஊடாக இந்து மயானங்களை பரிபாலனம் செய்கின்றன. ஆனால் யாழ் மாவட்டத்திலே சுமார் 38% மான இந்து மயானங்களுக்கே அபிவிருத்தி சபைகள் காணப்படுகின்றன. அவ்வாறு காணப்பட்ட அபிவிருத்திச் சபைகளிலும் மிகச் சிலவே மிகவும் சிறப்பாக இயங்கும் சபைகளாக இன்று காணப்படுகின்றன. மேலும், அபிவிருத்தி சபைகளின் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டமையினால் மயான அபிவிருத்தி வேலைத்திட்ட செயற்பாடுகளும் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன. குறிப்பாக, கடந்த காலங்களில் பல்வேறு நிதி மூலங்கள் ஊடாக மயானங்களை அபிவிருத்தி செய்ய வாய்ப்பிருந்தும், நாட்டின் அசாதாரண நிலைமைக்கு மேலாக சிறந்த மயான அபிவிருத்தி சபை இன்மையே முக்கிய காரணமாகும்.

யாழ்ப்பாணப் பிரதேசத்திலே மயானங்கள் தொடர்பாக பொது மக்கள் மத்தியில் பொறுப்புணர்வோ அன்றி விழிப்புணர்வோ மிகக்குறைவாக உள்ளதை இன்றைய மயானங்களின் நிலை எடுத்துக்காட்டுகின்றது. இதனால் பெருமளவு மயான அபிவிருத்திச்சபைகள் பெயரளவில் இருந்த போதிலும். அதன் செயற்பாடு குறைவாகவே காணப்படுகின்றது. மேலும், மயானங்களுக்கு இடையில் ஒரே சீரான தன்மையான முகாமை செயற்பாடுகளோ, தகன கட்டண அறவீடுகளோ, கட்டட அமைப்புக்களோ காணப்படவில்லை. இது பிரதேசத்திற்கு பிரதேசம் வேறுபட்டுக் காணப்படுகின்றது.

யாழ் மாவட்டத்திலே உள்ள இந்து மயானங்களில் சுமார் 40% மானவை ஒரு ஏக்கர் நிலக்காணிக்கு மேல் ஆட்சியுரிமை கொண்டுள்ளன.

ஆனால் யாழ்ப்பாணத்தில் நிலப்பயன்பாட்டு தேவைகளும், காணியின் பெருமதியும் பல்கி பெருகி காணப்படும் நிலையில் பெருமளவு நிலத்தை மயானத் தேவைக்கு முடக்கி வைத்திருப்பது எமது எதிர்கால பிரதேச அபிவிருத்திக்கு பின்னடைவாக அமையும். அதாவது இந்து மயானங்களுக்கு பொதுவாக 05 அல்லது 06 பரப்பு நிலம் போதுமானவையாகும். இதற்கு மேலதிகமாக உள்ள நிலத்தினால் உரிய முறையில் பராமரிப்பு, மேற்பார்வை செய்யமுடியாத நிலையினால் மயானங்களின் தூய்மை, புனிததன்மை கெட்டுவிடுகின்றது.

மேலும், சுமார் மூன்று, நான்கு தசாப்தங்களுக்கு முன்னர் குடியிருப்புக்களற்ற ஊரின் எல்லையிலே இந்து மயானங்கள் காணப்பட்டன. இதனால் அக்காலப்பகுதியில் 'காடு'. 'சுடுகாடு' என்ற பெயர்களினால் அவற்றை அழைத்தனர். ஆனால் இன்று குடித்தொகை அதிகரிப்பினாலும், இடப்பெயர்வினாலும் மயானங்களுக்கு அருகில் மக்கள் குடியிருப்புக்கள் அமையப் பெற்றுள்ளதைக் காணமுடிகின்றது. எனவே இன்றைய குடியிருப்புக்களுக்கு பெரும் சவாலாக இந்து மயானங்கள் காணப்படுகின்றன. இதனால் காடு, சுடுகாடு என்ற சொற்பதங்கள் குறைந்துள்ளது. உதாரணமாக, நல்லூர் பிரதேச சபைக்குரிய யாழ் பல்கலைக்கழகத்திற்கு அண்மையிலுள்ள கொக்குவில் இந்துமயானம், மற்றும் கலாசாலை வீதியிலுள்ள திருநெல்வேலி இந்துமயானம் ஆகியவை குடியிருப்புக்களுக்கு சவாலாக அமைந்துள்ளதைக் காணலாம்.

இந்துசமயத்தின் சிறப்பு நூலாக விளங்குகின்ற ஆகமங்கள் மயானம் அமைய வேண்டிய இடம்பற்றி கூறும் போது, "ஈசான்யதிக்கிலாவது வாயு திக்கிலாவது கிழக்கிலாவது வடக்கிலாவது ஆறு முதலானவையிருந்தால் அந்நதிக்கரையில் மயானத்தை அமைக்குக"[5] என்று கூறுகின்றது. அந்தவகையில் இந்து மயானங்கள் கடற்கரை ஓரங்களில் அமைந்திருப்பது சமய, சமூக மற்றும் சுற்றுச்சூழல் ரீதியில் விரும்பத்தக்க ஒன்றாகும். ஆனால் கடந்த காலங்களில் நிலவிய யுத்த நிலைமையினால் கடற்கரை பிரதேசங்கள் இராணுவத்தினரின் ஆக்கிரமித்த பிரதேசங்களாக மாறிவிட்டன. யாழ் குடாநாட்டைப் பொறுத்தவரையில் 45% க்கு மேலான இந்து மயானங்கள் நீரோட்டமுள்ள கடற்கரையை அண்மித்துக் காணப்படுகின்றன. இதனால் கடற்கரை ஓரங்களில் காணப்பட்ட இந்து மயானங்கள் பல செயழிழந்தும், மட்டுப்படுத்தப்பட்ட பாவனையிலும் காணப்படுகின்றன. குறிப்பாக வலி மேற்கு, வலி வடக்கு, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, தீவகம் போன்றவை கடற்கரையோர பிரதேசங்களாகும். இதனால் சிறந்த கடல் வசதி இருந்தும் சாம்பல் கரைப்பது, நீராடுவது போன்ற மயானக்கிரியைகள் சிறப்பாக செய்யமுடியாத நிலையில் இப்பிரதேச மக்கள் உள்ளார்கள்.

இந்து மயானங்களின் அபிவிருத்தியானது அவற்றை பயன்படுத்தும் மக்களின் சிறந்த பொருளாதாரத்திலேயே தங்கியுள்ளது. ஆனால் இந்துமயானங்களை கண்காணிக்கும் நிறுவனங்கள் ஒரு நலிவடைந்த பொருளாதாரத்தையே கொண்டுள்ளன. இதனால் இந்து மயானங்கள் பொருளாதார ரீதியில் பெருமளவுக்கு பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளது. இதனால் பல இந்துமயானங்கள் தமது அடிக்கட்டுமான வசதிகளைக்கூட கொண்டிருக்கவில்லை.

ஒரு இந்து மயானத்திற்குரிய அடிப்படை வசதிகளாக எரிகொட்டகை, மடம், நீர்வசதி (கிணறு), சுற்றுமதில், சாவு வண்டில், இளைப்பாறும் மண்டபம் என்பன மிகமுக்கியமானவையாகும். இவற்றை விட மலசலகூடம், தொடர்பாடல் நிலையம், காவலாளி அறை, நிழல் தரும் மரங்கள், மின்சார வசதி, சிறந்த வீதி அமைப்பு, மற்றும் எரிபொருள்(விறகு) வசதி போன்றவற்றையும் இந்துமயானம் கொண்டிருப்பது சிறந்தது ஆகும். இந்த வகையில் யாழப்பாணத்தில் மிகமிகக்குறைந்த இந்து மயானங்களே இவ்வாறான வசதிகளுடன் இன்று காணப்படுகின்றன. உதாரணமாக, கொக்குவில் இந்துமயானம், கோம்பயன் இந்து மயானம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். ஆனாலும் ஒரு சில இந்து மயானங்கள் தமக்குரிய எந்தவொரு அடிப்படை வசதிகளையும் கொண்டிருக்கவில்லை. குறிப்பாக மாரீசன்கூடல் இந்து மயானம், அம்பன் இந்து மயானம், போன்றவற்றைக் குறிப்பிடலாம

யாழ்ப்பாணப் பிரதேசத்திலே காணப்படுகின்ற பல இந்து மயானங்களின் எல்லைகள் சரியாக வரையறுக்கப்படாது, எல்லை வேலிகளோ அன்றி மதிலோ இன்றி காணப்படுகின்றன. இதனால் பெரும்பாலான இந்து மயானங்கள் இறந்த விலங்குகள், கழிவுகள் கொட்டும் இடமாகின்றன. மற்றும் ஆல் போன்ற பெருவிருட்சங்களில் விலங்குகளின் எச்சங்களை (இளங்கொடி) கட்டியும் விட்டுள்ளார்கள். இதனால் மயானச்சூழல் துர்நாற்றம் வீசும் இடமாகவும், தகனக்கிரியைகளைச் சிறப்பாக

செய்யமுடியாத நிலையும் காணப்படுகின்றது. அதுமட்டுமன்றி இந்து மக்களின் கடவுளாகிய சிவன் உறையும் இந்து மயானங்களுக்கு அருகில் கழிவு கொட்டும் இடமும், கொள்கலங்களும் அமைத்திருப்பதை காணலாம். உதாரணமாக கொத்தியாலடி இந்துமயானம்,(சுன்னாகம்), கந்தன்காட்டு இந்து மயானம் (கோப்பாய்), வேருண்டை இந்து மயானம்(கரவெட்டி) போன்றவற்றைக் குறிப்பிடலாம். மேலும், இந்து மயானங்களுக்கு அருகில் பெரும்பாலும் கல்லுடைக்கும் ஆலைகள் காணப்படுகின்றன. இவற்றினால் சத்தமும், தூசியும் இந்து மயானங்களின் தூய்மையை பாதிக்கும் காரணிகளாக உள்ளன. குறிப்பாக, பூவரசம் பிட்டி இந்து மயானம்,(கரவெட்டி), கொட்டைக்காடு இந்து மயானம் (கோண்டாவில்) விளாவெளி இந்து மயானம்(பண்டத்தரிப்பு) போன்றவை கல்லுடைக்கும் ஆலைக்கு அருகில் உள்ள இந்து மயானங்கள் ஆகும்.

இந்து மயான வளவுக்குள் தகனம் செய்ய வரும் போது ஏற்படும் கழிவுகளான மலர்வளையங்கள், போத்தல்கள், பிளாஸ்ரிக் பொருட்கள், பெட்டியின் ஆணிகள், எரிந்த உடம்பின் சாம்பல்மேடு, எலும்புகள் மற்றும் இதரபொருட்கள் என்பவற்றினால் மயானச்சூழல் அசுத்தமடைகின்றது. இவற்றுக்கு மேலாக பெரும்பலான மயானங்கள் பற்றைக்காடுகளாக காணப்படுகின்றன. மேலும் இந்து மயானங்கள் ஆலயங்களுக்கு ஈடாக அமையும் அதே நேரம் மேற்படி நிலைமையினால் அங்கு போகும் பொதுமக்கள் பாதணிகள் இன்றி செல்ல முடியாத நிலையும் பல மயானங்களில் காணப்படுகின்றது. இது ஒருவகை பயத்தையும், மன உளைச்சலையும் உண்டு பண்ணுகின்றது.

மயானங்களின் அடிப்படை வசதிகளில் ஒன்றான எரிகொட்டகையானது சுமார் 55% மான மயானங்களில் சேதமடைந்த நிலையிலோ அன்றி முழுமையாக இல்லாத நிலையிலோ காணப்படுகின்றன. அத்துடன் மயானங்களுக்கு செல்லும் வீதியானது ஒற்றையடிப் பாதையாகவும், சேதமடைந்த வீதியாகவும் பல மயானங்களில் காணப்படுகின்றது. மேலும், யாழ்ப்பாணப் பிரதேசத்தில் 45%க்கு மேலான மயானங்கள் தரவைப்பகுதியிலே அமைந்துள்ளன. குறிப்பாக சாவகச்சேரி பிரதேசத்தில் சுமார் 70% மான மயானங்கள் தரவைப்பகுதியில் இருப்பது குறிப்பிடத்தக்கது ஆகும். இவ்வாறான காரணங்களினால் மழை காலங்களில் மயானங்களுக்கு உடல்களை எடுத்துச் செல்வது, பொதுமக்கள் செல்வது, மயானக்கிரியைகளை சீராக மேற்கொள்ளுவது, உரியமுறையில் தகனம் செய்வது மற்றும் மயான கிரியைகளை மனஉணர்வுடன் சிறப்பாக செய்யமுடியாத நிலை போன்ற பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. குறிப்பாக மழை காலங்களில் உடல் தகனத்திற்கு ரயர், சீனி ஆகியவற்றை பயன்படுத்துவதைக் காணலாம். இது முறையற்ற தகன முறையாகும்.

உடல்களை தகனம் செய்வதற்கு பெரும்பாலான மயானங்களில் ஒரு தகன மேடையே காணப்படுகின்றது. இதனால் ஒரு உடல் முழுமையாக தகனம் செய்ய முன்னர் அல்லது தகனம் செய்த உடலுக்குரிய மறுநாள் கிரியைகள் செய்ய முன்னரோ மற்றைய உடல் தகனம் செய்யவேண்டிய சூழ்நிலை பல மயானங்களில் உள்ளது. இது ஒரு இந்துசமய அபரக்கிரியைக்கு பொருத்தமற்ற செயற்பாடாக உள்ளது. அதாவது உடல் முழுமையாக தகனம் செய்த பின்னர் காடாற்று மற்றும் அதனோடு இணைந்த அனைத்து கிரியைகளும் செய்த பின்பு தான் மற்றைய உடல் தகனம் செய்தல் வேண்டும்.

இன்று எம்மத்தியில் உள்ள இந்து மயானங்களில் பெரும்பாலானவை அடிப்படை உட்கட்டுமான வசதிகள் இன்றி உடல் தகனம் செய்யப்படுவது இந்துக்கிரியைகளின் புனித தன்மையை இழக்கசெய்கின்றது. குறிப்பாக மாதகல் போதி இந்துமயானம் அடிப்படை வசதிகளின்றிய நிலையில் காணப்படுவதனை அவ்வூர் மக்கள் உள்ளூராட்சி அமைச்சின் கவனத்திற்கு ஊடகங்களின் ஊடாக தெரியப்படுத்தியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.[6]

எமது பிரதேசத்தில் உள்ள இந்து மயானங்களை அடையாளம் காட்டக்கூடிய எந்தவொரு அடையாளச் சின்னங்களோ அன்றி மயானத்துக்குள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்ற சமயவிதிமுறைகளையோ அபிவிருத்திச்சபைகள் கடைப்பிடிப்பதில்லை.

பெரும்பாலான இந்து மயானங்களில் நீர்வசதி, மின்சார வசதி இல்லாத நிலையே காணப் படுகின்றது. பொதுவாக தகனக் கிரியைகளுக்கு நீர் மிகமுக்கியமாகும். எமது பிரதேசத்தில் நீர் மூலங்களாக கிணறு, கேணி, கடல் என்பன முக்கிய இடம் பெறுகின்றன. இந்து சமய மயானக்கிரியைகளை நீரோட்டமுள்ள சமுத்திர கடலில் ஆற்றுவதே மிகவும் சிறந்தது.

தவிர்க்கமுடியாத காரணத்தினால் சமுத்திரத்தை பயன்படுத்த முடியாத நிலையில் எமது பிரதேசத்திலுள்ள நீர்நிலைகள் பயன்படுத்தப-பட வேண்டிய நிலை காணப்படுகின்றது. ஆனாலும் அந்நீர்நிலைகளில் பல தூர்ந்த நிலையிலோ அன்றி நீரைப்பெற்றுக் கொள்வதற்க்குரிய வழிவகை-யின்றியோ காணப்படுகின்றது. இதனால் இந்து மயானக்கிரியைகள் முறை தவறியதாக அமைகின்றது.

இந்து மயானங்களில் கடந்த காலங்களில் இராணுவ மற்றும் இயற்கை அனர்த்தங்களினால் ஏற்பட்ட அழிவுகளை புனரமைப்பு செய்வதற்குரிய மூலப்பொருள், நிதி வசதிகள் குறைவாகவோ அன்றி மட்டுப்படுத்தப்பட்டதாகவோ காணப்பட்டன. மேலும், எமது பாராளுமன்ற உறுப்பினர்களின் நிதி மற்றும் அரச அரசசார்பற்ற நிதி ஒதுக்கீடுகளும் இந்து மயானத்துக்கு மிகக் குறைவாகவே காணப்பட்டது. ஒட்டு மொத்தமாக இந்து மயானங்களின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் யாவும் மிக குறைவாகவே காணப்படுகின்றன. அத்துடன் காலத்துக்குகாலம் அல்லது பருவத்துக்கு பருவம் செய்ய வேண்டிய வேலைத்திட்டங்களைக் கூட இந்து மயானங்களை மேற்பார்வை செய்யும் தொண்டு நிறுவன அமைப்புக்கள் மேற்கொள்ளாமையினால் இந்துமயானங்கள் வலுவற்றுக் காணப்படுகின்றது.

சமூகமானது மயானத்துடன் நெருங்கிய தொடர்புகளை கொண்டிருக்க வேண்டும். குறித்த சமூகத்தின் இறுதிக் கிரியைகளை திருப்தியாக மேற்கொண்டு சமூக விழுமியங்களை பேணக்கூடியதாக மயானங்கள் அமைதல் வேண்டும். ஆனால் எமது பிரதேசத்தில் காணப்படும் மயானங்களுக்கும் சமுகத்திற்கும் விரிசல் நிலை காணப்படுவதைக் காணலாம். அதாவது சமூகத்திற்காக உருவாக்கப்பட்ட மயானங்கள் சமூகத்தில் உள்ள சமூக விரோதிகளினால் சீரழிக்கப்பட்டு, சமூக விரோத செயற்பாடுகளுக்குரிய இடமாக பயன்படுத்துவதைக் காணலாம். மேலும், மயானம் தொடர்பான விழிப்புணர்வு, அதன் அவசியத்தன்மை போன்றன பொதுமக்கள் ரீதியல் அறியப்படாத நிலையிலேயே இன்றும் பெருமளவுக்கு காணப்படுகின்றன. இதனால் மயான வளர்ச்சியானது மந்தமாக உள்ளது.

மூடநம்பிக்கை கொள்கைகள், சாதி பாகுபாடுகள், பிரதேச வேறுபாடுகள் போன்றவற்றினால் மயானத்திற்கும் சமூகத்துக்கும் இடையிலான இடைவெளி அதிகரித்துள்ளதைக் காணலாம். அதாவது இன்றைய நவீன விஞ்ஞான காலத்திலும் கூட மயானத்துக்கு பெண்களோ அல்லது சிறுவர்களோ செல்ல முடியாதளவுக்கு சமூககட்டுப்பாடு உண்டு. இதற்கு முக்கிய காரணம் சமூக கட்டப்பாட்டுடன் கூடிய மூடநம்பிக்கையும், மயானத்தின் சீரற்ற தன்மையுமே ஆகும். யாழ்ப்பாணத்தில் மிகவும் ஆழமாக வேரூன்றியுள்ள சாதியக்கொள்கையினால் மயானங்களின் வளர்ச்சியும் அதனுடன் கூடிய பிரதேச விருத்தியும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் ஒரு சிறிய கிராமத்தில் ஒவ்வொரு சாதிக்கும் தனித்தனியான மயானங்கள் அமைந்துள்ளதை காணலாம். மேலும், பிரதேச நிர்வாக எல்லை வேறுபாடு காரணமாக மிக அருகருகே மயானங்கள் அமைந்துள்ளன. குறிப்பாக, நல்லூர், வலி கிழக்கு பிரதேச சபை எல்லையில் சுமார் 50 மீற்றர் இடைவெளியில் செம்மணி மயானம் உள்ளது. அதுபோன்று வலி மேற்கு. வலி தெற்கு மேற்கு பிரதேச எல்லைகளில் உள்ள முறையே வழுக்கையாற்று இந்து மயானம், ஆரியம்பிட்டி இந்து மயானம் ஆகியன மிக அருகில் அமைந்துள்ளது. இவை மயான விருத்திக்கு தடையாக அமையும். மேலும், குடும்ப கௌரவத்துக்கு ஏற்றவகையிலும் ஒருசில மயானங்கள் அமைந்துள்ளன. உதாரணமாக. வலி தெற்கில் திடற்புலம் இந்து மயானமும், வலி கிழக்கில் சிறுப்பிட்டி மேற்கு மழவராயர் குடும்ப மயானங்களை குறிப்பிடலாம். இவை இன்று குறைந்த பாவனையில் உள்ளன.

இறுதி யாத்திரையின் போது மயானத்துக்கு செல்லும் பொதுமக்கள் இறந்த உடலுக்கு கவலையுடன் கூடிய கௌரவம், மரியாதை என்பனவற்றை செலுத்தும் அதே நேரம் வேறு சிலர் மதுபோதையிலும், பட்டாசு கொளுத்தி கேளிக்கை நடவடிக்கையிலும். இறுதி ஊர்வலத்தை மேற்கொண்டு வருவதைக் காணலாம். குறிப்பாக பறை மேளம் அடிப்பவர்கள், தேவாரதிருமுறை பாடுபவர்கள், தகனத்துக்கு விறகு அடுக்குபவர்கள் மதுபோதையில் இருப்பதைக் காணலாம். இதனால் இந்துசமய விழுமியப்பண்புகள் நலிவடைவதுடன், மயானத்தில் நடைபெறும் வாய்க்கு அரிசி போடுதல், கட்டை அடுக்குதல். முட்டி உடைத்தல் முதலிய சமயக்கிரியைகளையும் முறையாக நடாத்தவிடாது, மற்றையவர்களையும் வேதனைக்குள்ளாக்கி விடுவதனை பல இடங்களில் காணலாம்.

**முடிவுகளும், அவற்றுக்கான தீர்வுகளும்.**

யாழ்ப்பாணத்தில் இந்துமயானங்கள் சமகாலத்தில் பலபிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளது என்பது இவ்வாய்வின் மூலம்

பெறப்படுகின்றது. அந்தவகையில் இந்து மயானங்களின் சமகாலப்பிரச்சினைகளுக்கு இவ்வாய்வின் மூலம் முன்வைக்கப்படும் தீர்வுகளாக பின்வருவனவற்றை கூறலாம்.

இந்து மயானங்களில் கடவுள்(சிவன்) குடிகொள்ளுகின்றான் என்ற இந்துக்களின் நம்பிக்கையினால், சிவனை சுடலையாண்டி என்று குறிப்பிடுவர். இவ்வகையில் தெய்வீகத்துவமுடைய இந்துமயானங்களையும் ஆலயங்கள் போன்று சமய கிரியைகளை மேற்கொள்வதற்குரிய புனிததன்மையுடன் பேணிபாதுகாக்க வேண்டிய பொறுப்பு எம்மவர்களுக்கு உண்டு.

பொதுவாக ஒரு இந்துமயானத்தின் அடிப்படை வசதிகளாக எரிகொட்டகை, மண்டபம், கிணறு, சுற்றுமதில் என்பன அவசியம் இருத்தல் வேண்டும் இவற்றுக்கு மேலதிகமாக, தண்ணீர் தாங்கியுடன் கூடிய நீர்வசதி, மின்சாரம், காவலாளி அறை, மலசலகூடம், சாவு வண்டில், சிறந்த வீதி அமைப்பு, தொலைத்தொடர்பு வசதி மற்றும் விறகு வசதி என்பனவற்றையும் கொண்டிருத்தல் மயானத்தின் சிறந்த வளர்ச்சியை காட்டமுடியும்.

கடந்தகால உள்நாட்டு போர்சூழலில் உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் அகப்பட்ட வட்டுக்கோட்டை இந்துமயானம் அவ்வூர் மக்களின் பங்களிப்பினால் இந்துமாயனம் புனரமைக்கப்பட்டு, அதன் மடமும் திருத்தியமைக்கப்பட்டுள்ளதோடு புதிதாக எரிகொட்டகையும் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வானது பொதுமக்களின் மத்தியில் இந்துமயானங்கள் பற்றிய விழிப்புணர்வை எடுத்துக்காட்டுகின்றது.[7]

இந்துமயானச் செயற்பாட்டுக்கு சிறந்த ஆளணி முகாமையை உருவாக்கிக்கொள்ளுதல் வேண்டும். குறிப்பாக, இறந்த உடலை தகனம் செய்பவர், மயானக்காவாளி, மயானச்சுத்திகரிப்பாளார் போன்ற ஆளணியை உருவாக்கி செயற்படுத்துவது அவசியம்.

இந்து மக்கள் மத்தியில் இந்துமயானம் பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்குகளை ஒழுங்கு செய்தல். அனைத்து உள்ளுராட்சி மன்றங்களும் தமது வருடாந்த வரவு செலவுத்திட்டத்தில் தமது எல்லைக்குட்ப்பட்ட மயானங்களின் திருத்தம், மேற்பார்வை செலவுக்கு ஒருதொகை நிதியை ஒதுக்கீடு செய்தல் வேண்டும்.

மறுசீரமைக்கப்பட்ட இந்துமயான நிர்வாகசபைகள் உருவாக்குதல். யாழ்ப்பாண மாவட்டத்தில் காணப்படுகின்ற அனைத்து இந்து மயானங்களையும் அந்தந்த பகுதியிலுள்ள உள்ளுராட்சி மன்றங்களே பொதுச்சட்ட முகாமையின் ஊடாக மேற்பார்வை செய்து, நிர்வகித்துக் கொள்ளுதல் வேண்டும். இதற்க்காக உபவிதிகளை இயற்றி வேறுபட்ட முகாமை செயற்பாடுகளைக் களைந்து, நிலைத்திருக்கக்கூடியதும், நடைமுறைச்சாத்தியம் கொண்டதுமான முகாமை செயற்பாடுகளை கண்டறிந்து, யாழ்ப்பாண மாவட்ட மயானங்களை பொதுச் சட்டத்தின் ஊடாக ஒருகூரையின் கீழ் நிர்வகித்தல் வேண்டும். மயானங்களின் செயற்பாடுகள் அனைத்தும் ஒரே சீரான தன்மையைக்கொண்டிருத்தல் வேண்டும்

உள்ளுராட்சி மன்றங்களினால் வெளியீடப்படும் சுற்றறிக்கைகள், உபவிதிகள் என்பவற்றை உரியமுறையில் கடைப்பிடிக்க வேண்டும். இன்று இந்து மயானங்களைப் பராமரித்து, மேற்பார்வை செய்யும் பொறுப்பில் உள்ளுராட்சி மன்றங்கள் விளங்குகின்றன. அந்தவகையிலே ஒவ்வொரு உள்ளுராட்சி மன்றமும் காலத்துக்குக் காலம் தனது பரிபாலனத்தின் கீழ் உள்ள இந்து மயானங்களுக்கு பல்வேறு சட்டவிதிகளையும், யாப்புகளையும், அபிவிருத்திச் சபைகளையும் உருவாக்கி வருகின்றது. அந்தவகையில் 2007ம் ஆண்டு உள்ளுராட்சி மாகாண சபைகள் அமைச்சின் "உள்ளுராட்சி மறுசீரமைப்பு சுற்றிக்கை -2007" தொகுப்பில் சுற்றறிக்கை 09 இல் மயானங்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.[8]

இந்துமயான அபிவிருத்திச்சபை உள்ளுராட்சி மன்றங்களில் பதிவு செய்தல் வேண்டும். இதனால் மயானத்திற்கு நிலவரைவு, காணி உறுதி என்பவற்றை உறுதி செய்தல் அவசியம். மயான அபிவிருத்தி சபைகள் தமது பகுதி பொதுமக்களுக்கு முறையான மயானக் கடமைச்செயற்பாடுகளையும், யாப்புரீதியான தெளிவுகளையும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் வாயிலாக விளக்கிக்கொள்ளுதல் வேண்டும். அதன் ஊடாக மக்கள் பங்களிப்புடன் சமூக மட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தி, சிறந்த மயான முகாமை செயற்பாட்டிற்கு வழிசமைக்கலாம். இதன் மூலம் 'தங்கம் செய்யாத வேலையை சங்கத்தின் ஊடாக மேற்கொள்ளமுடியும்' என்ற கூற்றை வலுப்படுத்த முடியும்

யாழ்ப்பாண இந்து மயானங்களின் நிலப்பயன்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். இந்து மயானங்களின் கௌரவமான

செயற்பாட்டிற்கு சுமார் 06 அல்லது 07 பரப்பு நிலம் போதுமானது ஆகும். எனவே அதற்கு மேலதிகமாக உள்ள நிலத்தை சமூகத்தின் மற்றைய தேவைக்கு ஒதுக்கி சிறந்த நிலப்பயன்பாட்டுக்கு உதவுதல் வேண்டும். நிலஅளவைக் குறைக்கும் போது மயானத்தை அழகாகவும், பாதுகாப்பு மற்றும் புனிதம் நிறைந்த ஒன்றாகவும் உருவாக்க முடியும். ஆலயங்களைப் போன்று மரங்கள் மற்றும் பூந்தோட்டங்களை அமைத்து பாராமரிக்கப்படல் வேண்டும். அதேபோன்று சனத்தொகை விகிதாசாரத்திற்கேற்ப மயானங்களின் எண்ணிக்கை குறைத்தல் வேண்டும். அதாவது சாதிக்கு சாதி, சமூகத்துக்கு சமூகம் என்ற நிலையில் உருவாக்கப்பட்ட மயானங்களை தவிர்த்து ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்தின் நிலவிஸ்தீரனத்திற்கு ஏற்ற வகையில் இந்துமயானங்களை வரையறுத்துக் கொள்ள வேண்டும்.

நவீனகால மாற்றத்திகேற்ற வகையில் இந்துமயானக் கிரியைகள் நவீன விஞ்ஞானக் கொள்கையுடன் செயல்படுதல் வேண்டும். குடியிருப்புக்கள் செறிவாக உள்ள பிரதேசங்களில் மின்சக்தி மூலமான ஏரிகொட்டகையை உருவாக்கி, குடியிருப்புக்களின் பாதுகாப்பை உறுதி செய்து கொள்ளமுடியும். அந்தவகையில் யாழ்ப்பாணத்தில் முதல்முதலாக யாழ்நகரை அண்டியபகுதியான வண்ணார்-பண்ணையிலுள்ள கோம்பயன் இந்துமயானத்தில் மின்சார மூலமான எரிகொட்டகை நிறுவப்பட்டுள்ளது. இச்செயற்பாடு தகனம் செய்யப்பட்ட உடற்சாம்பலிலிருந்து செய்வினை, சூனியம் செய்யும் இடமாக மயானம் விளங்குகின்றது எனும் இந்துமக்களிடையே காணப்படும் மூடநம்பிக்கையினை நீக்குவதாக அமைகின்றது.

மயானங்களில் தகனத்தின் போது வெளிவரும் புகை, மணம் என்பன குடியிருப்புக்களை பாதிக்காதவாறு இயற்கையான சுற்றுச்சூழல் பாதுகாப்பை அமைத்திடல் வேண்டும். அதாவது மயானங்களில் உயரமாக வளரக்கூடிய பனை மரம், அசோக் மரம் மற்றும் ஆல், வேம்பு, அரசு போன்ற பெரும் விருட்சங்களை நாட்டிவளர்த்தல் வேண்டும்.

உடல் தகனத்தின் போது சூழலுக்கு ஊறுவிளைவிக்கும் ரயர் போன்ற எரிபொருட்களை பயன்படுத்துவதும், இன்று சூழலை அச்சுறுத்தும் 'சொப்பிங்பை", "பிளாஸ்ரிக்" போன்றவற்றை மயானத்தக்குள் பயன்படுத்துவதையும் தடுத்தல் வேண்டும். மயான வளவுக்குள் எவரும் அவ்வாறு வருபவர்கள் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். மயானத்தை சூழவுள்ள (சுமார் 100 மீற்றர்) பிரதேசத்தை புனித பிரதேசமாக பிரகடனப்படுத்தப்படல் வேண்டும். இப்பிரதேசத்தில் மதுபானசாலைகள், சத்தம்மிகுந்த கைத்தொழில்கள், கொள்கலம், கழிவுகொட்டும் இடம், களியாட்ட நிறுவனங்கள், மற்றும் இராணுவ காவலரன் என்பனவற்றை முழுமையாக தடைசெய்தல் வேண்டும். அத்துடன் பொதுமக்களுக்கு இப்பிரதேசத்தில் வாகன ஒலி எழுப்புதல், மற்றும் புனிததன்மையை கெடுக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுவது தண்டனைக்குரிய செயற்பாடாகும் என்பதை உள்ளூராட்சி மன்றத்தினால் உரிய முறையில் அறிவித்தல் வேண்டும்.

மனித வாழ்வு இவ்வுலகில் கிடைத்த மிகப்பெரிய பேறு ஆகும். உயிர் பிரிந்த உடலானது புனிதத்தன்மை பெறுவதனால் அதன் புனிதத் தன்மையை பாதுகாத்துக் கொள்ளுவதற்கும், சுற்றத்தவர்கள் கூடிநின்று இறுதி வணக்கத்தைச் செய்வதற்கும், புனிதமான தேவார, திருமுறைப்பாடல்களை ஒதிக்கொள்ளுவதற்குமாக இந்துமயானங்கள் மிகவும் புனிததன்மையுடன் பேணவேணடியது அவசியமாகின்றது. எனவே, இன்றைய இந்து மயானங்களை வழிநடாத்தும் பாரிய பொறுப்பு பொதுமக்களுக்கே உரியதாகும். அதன் மூலம் இந்து மயானங்களின் இட அமைவை நட்பார்ந்த இயற்கை சூழலுக்கு ஏற்றவகையில் சிறந்த முறையில் மாற்றி எதிர்காலத்தில் புனிதத்தன்மை கொண்ட இடமாக அமைத்தல் வேண்டும்.

நிறைவு.இந்து மயானங்கள் புனிதத் தன்மையுடையதாக எப்போது மாறுகின்றதோ அப்போதே மனிதப்பிறவியின் மாண்பு சிறப்பிக்கப்படும். மேற்படி இந்துமயானங்கள் எதிர்நோக்கும் சமகால பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளை முன்வைத்து அவற்றினை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக, நீடித்து நிலைத்து நிற்கக்கூடியவகையில் இந்து மயான செயற்பாடுகள் அமைந்து இந்துமயான்ஙகள் செயல்திறன் கொண்ட ஒரு சமய, சமூக மையமாக மாற்றியமைக்கமுடியும் என்பது இவ்வாய்வின் மூலம் பெறப்படுகின்றது.

அடிக்குறிப்பு:

http://w.w.w.Statistics.gov.lk

02. மதுரைதமிழ்ப்பேரகராதி, Vol.02, சென்னை.

03. திருஞானசம்பந்தர் தேவாரம், திருமயிலாப்பூர் பூம்பாவைத்திருப்பதிகம், 1-13.

04. புள்ளி விபர தகவல், யாழ்ப்பாண மாவட்ட செயலகம் - 2013.

05. காமிகாகமம், கிராமாதி அங்கஸ்தான நிர்ணய விதி படல சந்த்ரிகை.

06. தினக்குரல் நாளேடு, 12.03.2015, ப.111.

07. தினக்குரல் நாளேடு, 27.03.2015, ப.04.

08. உள்ளூராட்சி மறுசீரமைப்பு சுற்றிக்கை - 2007, உள்ளூராட்சி திணைக்களம்.